பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 27 சனிக்கிழமை 11.01.2025 | அதிர்வு 163

## அந்தனி ஜீவா காலமானார்!



எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற் சங்க செயற்பாட்டாளர், இதழாளர்,

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை மிகவும் அவசியம்

## அதுவே தமிழினத்துக்குப் பெரும் பலம் என்கிறார் சித்தர்

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு ஒற்றுமைப் படுவதே தமிழினத்துக்குப் பெரும் பலமாக இருக்கும்."

- இவ்வாறு புளொட் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஒற்றுமையின் ஊடாக ஏற்படுகின்ற பலத்தைக் கொண்டு தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

04

# 'தில்' இருந்தால் பொதுச் சபையைக் கூட்டுக!

## தமிழரசின் மத்திய குழுவினருக்கு சிவமோகன் பகிரங்க சவால்



(கி.வசந்தன்)

துணிச்சல் இருந்தால் வழக்கை மீளப் பெற்று தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையைக் கூட்டுங்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவினருக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும்தமிழரசுக்கட்சியின்மத்திய குழு உறுப்பினருமான சி.சிவமோகன் சவால் விடுத்துள்ளார்.

அத்துடன், கொழும்பான்களின் கூக்குரலுக்கு நான் பயந்தவன் அல்லன். என்னை நீக்கும் அதிகாரம் பொதுச்சபைக்கே உள்ளது என்றும் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

04



# தமிழகத்தில் 'எத்திசையும் தமிழணங்கே' மாநாடு

நான்காவது உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் நாள் மாநாடு தமிழ்நாட்டின் சென்னை வர்த்தக மையத்தில் இன்று ஆரம்பமாகியுள்ளது.

"எத்திசையும் தமிழணங்கே" என்ற தலைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் 60 நாடுகளிலிருந்தும் 17 மாநிலங்களில் இருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் விசேட அழைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளார்கள்.







# தந்தை செல்வாவின் நினைவுச் சதுக்கம் அமைந்துள்ள பகுதியில் சிரமதானப் பணி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவினுடைய நினைவுச் சதுக்கம் அமைந்துள்ள பகுதியில் இன்று காலை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தலைமையில் இந்தச் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

இதன்போது தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள், கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

தந்தை செல்வாவின் நினைவுச் சதுக்கம் அமைந்துள்ள பகுதிகள் புற்கள் வளர்ந்து பற்றைக் காடாகக் காட்சியளித்த நிலையில் இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தனியார் பஸ் விபத்து!

## 13 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்



(எம். எப். றிபாஸ்)

கொழும்பில் இருந்து பசறை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 13 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.





# பொலிஸ் எனக் கூறி ரூ. 53,700 கொள்ளை

(ந.லோகதயாளன்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தம்மை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என்று போலியாக அடையாளப்படுத்தியவர்கள் 53 ஆயிரத்து 700 ரூபாவைக் கொள்ளையிட்டுள்ளனர்.

கோப்பாய் சந்தியை நோக்கிப் பயணித்த ஒருவரை கோப்பாய் பழனியாண்டவர் கோவில் பகுதியில் வைத்து சிலர் இடைமறித்துள்ளனர். இதன்போது, தம்மை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என்று அடையாளப்படுத்திய அவர்கள், குறித்த நபரின் பொதியைச் சோதனையிடுவதாகத் தெரிவித்துவிட்டு அதில் இருந்த 53 ஆயிரத்து 700 ரூபாவைக் கொள்ளையிட்டுள்ளனர்.

அமைதியாகச் செல்லும்படியும், இல்லாவிடில் கஞ்சா குற்றத்துக்காக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர்கள் மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பால் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அந்தனி ஜீவா...

பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட அந்தனி ஜீவா நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் 1944 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி பிறந்தார்.

கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக இல்லாமல், சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டு வந்தவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழுத்தாளரும் கவிஞருமாக அந்தனி ஜீவா விளங்குகின்றார்.

கொழும்பு சுவர்ண வீதியிலிருந்த தமிழ்ப் பாடசாலையிலும் பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்ற அந்தனி ஜீவாவின் தந்தை செபஸ்டியன், தாயார் லட்சுமி அம்மாள்.1960 இல் எழுதத் தொடக்கிய இவர் கண்டியூர் கண்ணன், மாத்தளை கௌதமன், கவிதா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

தினகரன், சுதந்திரன், மாணவன், தமிழருவி, திருமகன், கலைமலர், மாணவமலர், மாலைமுரசு, ஈழநாடு, சிந்தாமணி, சிரித்திரன், அமுதம், தேசபக்தன், நவமணி உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார்.

நாடகத்துறையிலும் பங்களித்துவரும் இவர் எழுதிய முதல் நாடகமான ‘முள்ளில் ரோஜா’ 1970 இல் மேடையேறியது. 1970களில் தொழிலாளர் வர்க்கப் பிரச்சனைகளைக் கருப்பொருளாகக் கொண்ட அக்கினிப்பூக்கள், வீணை அழுகின்றது முதலான நாடகங்களை உருவாக்கினார்.

மலையக இலக்கியங்களையும், இலக்கிய கர்த்தாக்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாவுக்கு உண்டு. மலையகத்தில் தமிழ் வளர்த்தோரும், கலை வளர்த்தோரும், மலையக மக்களிடம் உரத்த சிந்தனைகளை விதைத்தோரும், மலையக மக்களின் விடுதலைக்கு உழைத்தோரும் எனப் பன்னிருவர் பற்றிய தகவல்கள் அடங்கிய ‘மலையக மாணிக்கங்கள்’ என்னும் நூலை 1998 ஆம் ஆண்டு கொழும்பு துரைவி வெளியீடாக கொண்டு வந்தார்.

அந்நூலில், மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளான கோ. நடேசய்யர், மீனாட்சி அம்மையார், பெரி. சுந்தரம், இராமானுஜம், ஜெ.எஸ். பெரோ, ஜார்ஜ் ஆர். மேத்தா, மலையக காந்தி ராஜலிங்கம், வி.கே. வெள்ளையன், சி.வி. வேலுப்பிள்ளை, ஏ. அஸீஸ், சோமசுந்தரம், அசோகா பி.டி. ராஜன் ஆகியோர் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு நாவல திறந்த பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்ற அந்தனி ஜீவா தினபதி, செய்தி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார். கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனசக்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டுகொல்லப்பட்டதன் எதிரொலியாக தினகரன் இதழின் வாரமஞ்சரியில் ‘அன்னை இந்திரா’ தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பானது நூலாகவும் வெளிவந்தது.

அத்துடன் ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர்(1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரியும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலையகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம் பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார்.

மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதைகள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதைகள், 2002), அம்மா(சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

மலையகத்தின் தேர்ந்த 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து ‘குறிஞ்சிக் குயில்கள்’ என்னும் நூலினை 2002 ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு கொண்டு வந்தார்.

‘அம்மா’ என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்தார். பெண் படைப்பாளர்களை கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் அந்தனி ஜீவா.

மலையகத்தில் 1980 களில் வீதி நாடகங்களை முதன் முதலில் ஆரம்பித்தவர் என்ற பெருமை அந்தனி ஜீவா அவர்களையே சேரும். அத்துடன் அவர் 14 நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

## ‘தில்’ இருந்தால்...

“கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. திருகோணமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபையானது முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனிமேல் யாப்பு மீறல் செய்ய மாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால், மீண்டும் அதே யாப்பு மீறலை மத்திய குழு செய்கின்றது என்றால் இதன் நோக்கம் என்ன? பொதுக் குழுவுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார்? என்பது வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயம். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக்கூடாது.

கடந்த ஒரு மத்திய குழுக் கூட்டத்தில், மாவை சேனாதிராஜாவைப் பார்த்து, ‘கதிரையில் இருக்க வேண்டாம். உங்கள் இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது’ என்று சொன்ன நபர் மத்திய குழுவிலேயே இல்லாத ஒருவர். மத்திய குழுவில் இல்லாத ஒருவர் உள்ளே எடுக்கப்பட்டு அவரால் சேறு பூசப்படுகின்றது. இறுதிக் கூட்டத்துக்கு முன்பாக, நிகழ்ச்சி நிரலைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு தலைவர் மாவை சேனாதிராஜா கடிதம் அனுப்பினார். ஆனால், அதற்கு முந்தைய திகதியைப் போட்டு பதில் செயலாளர் நிகழ்ச்சி நிரலை அனுப்பியுள்ளர். நிலைமை அவ்வாறே உளது.

பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்துகொண்டு யாப்பை மீறிச் செயற்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்குத் துணிவு இருந்தால் வழக்குகளை மீளப்பெற்று பொதுச் சபையைக் கூட்டுமாறு சவால் விடுக்கின்றேன்.

பொதுச் சபை கூட்டப்பட்டால் மட்டுமே மாபியாக்களிடம் இருந்து தமிழரசுக் கட்சியை மீட்க முடியும்.

தேசியப் பட்டியல் என்பது சமுதாயத்தில் கௌரவமான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏறி மிதிச்சாலும் தலையைத் தூக்கத் தெரியாத நாக்கிளி பாம்புகள், காணி பிடிக்கின்ற மாபியாக்கள், ஜனநாயக மறுப்பை செய்யும் சுயநலவாதிகளே தேசிய பட்டியலில் வந்தவர்கள். இதனால் கட்சியை வளர்க்க முடியுமா?” – என்றார்.

## தமிழ்த் தேசிய...

அதற்கு நாங்கள் எல்லோரும் முதலில் ஒற்றுமைப்பட வேண்டும். இன்றிருக்கின்ற நிலைமையில் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

ஏனெனில் தமிழ்த் தேசியத்திதுடன் பயணிக்கின்ற எமது வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த தேர்தலில் அதற்கு மாறான பயணத்தில் ஈடுபட்டிருப்பது தெரிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தைத் தவிர்த்துவிட்டு வடக்கை எடுத்துப் பார்த்தால் அதிலும் யாழ்ப்பாணம் மிக மோசமான முடிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் தொடர்வது தமிழினத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆகையினால் எங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவதன் ஊடாகத் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தலாம்.

அவ்வாறான ஒற்றுமையைத்தான் எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகையினால் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழ் மக்களையும் இணைத்துக்கொண்டு தமிழ்த் தேசியத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.” – என்றார்.

# பதறுகின்றது அநுர அரசு!

## மொட்டுக் கட்சி விளாசல்



"தேசிய மக்கள் சக்தி அரசு தற்போது பதற்றமடைய ஆரம்பித்திருக்கின்றது. ஊடகங்களை அவர்கள் கையாளும் விதத்தில் இது தெளிவாகின்றது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கூறியதாவது:-

"அண்மைக்காலமாக அரசின் பிரதிநிதிகள் சிலர் ஊடகங்களுடன் முரண்பட்டு வருகின்றனர். குறிப்பாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்கள் தொடர்பில் பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். சில சந்தர்ப்பங்களில் கருத்து வெளியிடுகையில், பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர்களைக்கூறி உரையாற்றுகின்றார். நான் கடந்த காலங்களில் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றியவன் என்ற ரீதியில், தற்போதைய அரசு ஊடகத் துறையைக் கையாளும் விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசு தற்போது பதற்றமடைந்து துலங்கலை வெளிக்காட்டும் நிலையை அடைந்திருக்கின்றது. வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடக்கூடும். இருப்பினும் நாம் அதனைப் பொறுமையுடன் கையாண்டு, அதற்கு அறிவார்ந்த ரீதியில் பதிலளிக்க வேண்டும்.

மாறாக ஊடகங்கள் தமக்கு ஏற்றவாறு அல்லது தமக்குச் சார்பாக செயற்படவில்லை என அரசு பதற்றம் அடையக்கூடாது. எனவே, பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட அரசின் பிரதிநிதிகள் ஊடகங்களைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியின் பொருளாதாரத் திட்டங்களைத் தவறு என்று தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்தனர். தாம் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுவருவதாகக் கூறியே அவர்கள் ஆட்சிப்பீடம் ஏறினார்கள். ஆனால், ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளையே தற்போதைய அரசினரும் மாற்றமின்றிப் பின்பற்றுகின்றனர்." – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை

## இப்படி பிள்ளையான் சத்தியம்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"உலகத்தில் உச்சப் பாதுகாப்பு கட்டமைப்புக்கு அதிக நிதியைச் செலவு செய்கின்ற அமெரிக்காவில்கூட ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதேபோன்றுதான் இலங்கையிலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் நடைபெற்றன.

காத்தான்குடியைச் சேர்ந்த இளைஞர்களால் அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கவரப்பட்டதாகவும், அல்லாவுக்காக மரணிப்பதாகவும் அவர்களே கூறியுள்ளனர்.

இவ்வாறிருக்கையில், தற்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு தேவையற்ற விடயத்தில் என்னைத் தொடர்புபடுத்தி இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக ஜனாதிபதி அநுர கிறிஸ்தவ மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைநிறைவேற்றுவதற்காகவும்,கிறிஸ்தவர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டும் செயற்பட்டு வருகின்றார்.

என்னோடு இருந்துவிட்டு, என்னிடமிருந்து பிரிந்து பிரிட்டனுக்குச் சென்ற அஸாத் மௌலானா என்ற நபர் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெறுவதற்காக வழங்கிய வாக்குறுதிகளை மையமாக வைத்து என்னை விசாரிப்பது தவறான அணுகுமுறை." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஐக்கியம் எதற்கு முக்கியம்?

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவரும் - அனைத்துக்கட்சிகளும் - ஒற்றுமைப்பட வேண்டியது அவசியம். இன்றைய காலத்தின் கட்டாயம். அவ்வாறு ஒற்றுமைப்படுவதே தமிழினத்திற்கு மிகவும் பலமாக இருக்கும். அவ்வாறான ஒற்றுமையின் ஊடாக ஏற்படுகின்ற பலத்தைக் கொண்டு தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குரிய நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

- இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது படுகொலையுண்ட பத்து அப்பாவித் தமிழர்களின் 51 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்த் தரப்புகள் பிரிந்து நின்றமை யாழ்ப்பாணத்தில் மிக மோசமான முடிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றமையை அவர் விசேடமாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இவ்வாறான நிலைமைகள் தொடர்வது தமிழினத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆகையினால் எங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவதன் ஊடாக தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தலாம் என்று அவர் கூறியிருக்கின்றார்.

உண்மைதான். அவர் சொல்லியிருப்பது முற்றிலும் சரியான, நியாயமான, யதார்த்தமான கூற்று.

ஐக்கியம் முக்கியம். அதில் சந்தேகத்துக்கிடமில்லை.

ஆனால், அந்த ஐக்கியம் எத்தகைய அடிப்படையில் ஏற்பட வேண்டும் என்பதுதான் இங்கு நியாயமாக எழும் கேள்வி.

இப்போது தமிழர் தரப்புக்கள் தனித்துப் பிரிந்து நின்றமையினால் தமிழ் தேசியத்தைப் பொறுத்தவரை ஏற்பட்ட பின்னடைவுகள் - இழப்புக்கள் - வெளிப்படையாக, துலாம்பரமாகத் தெரியும் நிலை வந்திருக்கிறது.

அதேசமயம் தமிழ் தேசியத்தின் ஐக்கியம் என்ற பெயரில் கட்சிகள் - தரப்புகள் - மற்றைய கட்சிகளின் மீது குதிரை ஓட்டிய விடயமும் கூட இப்போது அம்பலமாகி இருக்கின்றது.

ஐக்கியத்தின் பெயரால் ஜனநாயக ரீதியில் அதீத லாபங்களைச் சூறையாடிக் கொண்ட தரப்புகள், இப்போது தனித்து நின்று கையைச் சுட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் ஒவ்வொரு தரப்பும் தத்தமது ஆதரவு - செல்வாக்கு - ஆகியவற்றின் நீள அகலங்களை ஓரளவுக்கு புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பும் கிட்டி இருக்கின்றது.

இனி, மீண்டும் வலியுறுத்துகின்ற ஐக்கியத்தில் தங்களின் வகிபாகம் - பங்கு - நீள, அகலம் - யாது என்பது ஒவ்வொரு தரப்புக்கும் இப்போது தெளிவாகப் புரிந்து இருக்கும் என்றும் நம்பலாம்.

திரும்பவும் ஐக்கியம் என்ற பெயரில் அதிக ஜனநாயகப் பங்கை முறையற்ற விதத்தில் பிடுங்கும் தந்திரத்தோடு தரப்புகள் வராமல் இருப்பது நல்லது. தேசியத்தின் நன்மை கருதி ஒற்றுமை வேண்டுமே தவிர, தனித் தரப்புகள் ஜனநாயக செல்வாக்கு மிக்க மற்றைய தரப்புகளின் மீது ஏறி குதிரை விடுவதற்கு ஐக்கியம் அவசியம் அல்ல.

தமிழ் தேசிய தரப்புகளின் ஐக்கியத்தை - ஒற்றுமையை - வலியுறுத்தும் தரப்புகள் அந்த ஒற்றுமையின் மீது தாம் சவாரி விடும் எண்ணத்தை கைவிட்டு, அந்த ஐக்கிய மூலம் தமிழ் தேசிய நிலைப்பாடு கட்டுறுதியாக இருப்பதை உறுதிப்படுத்தும் இலக்கோடு வரவேண்டும்.

அத்தகைய ஐக்கியமே இப்போது முக்கியம்.



# புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை தூதரக தலைவர்களுடன் பிரதமர் ஹரிணி சந்திப்பு!

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை தூதரகத் தலைவர்கள், இராஜதந்திர ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்க பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்துள்ளனர்.

இதன்போது வர்த்தகம், சுற்றுலா, இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பின் முக்கிய துறைகளை விரிவுபடுத்துவது குறித்து இந்த விவாதத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், உலக சந்தையில் இலங்கைப் பொருள்களுக்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதன் முக்கியத்துவத்தையும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக உள்ளூர் தொழில்களை ஊக்குவிக்கும் அதேவேளை, வளர்ந்து வரும் சந்தைகளில் வலுவான இருப்பை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட புதிய தூதரகத் தலைவர்களில் கட்டார் நாட்டின் தூதர் ஆர்.எஸ். கான் அசாரட், நியூசிலாந்து தூதர் டபிள்யூ.ஜி.எஸ். பிரசன்னா, ரஷ்ய கூட்டமைப்பின் புதிய தூதர் எஸ்.கே. குணசேகர, குவை தூதர் எல்.பி. ரத்நாயக்க, அரபு நாடுகளுக்கான தூதர் ஏ.எஸ்.கே. செனவிரத்ன, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகாவத்த ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# மதுபானங்கள், சிகரெட் விலைகளில் உயர்வு!

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானங்களுக்கான வரியில் 6 வீத அதிகரிப்பை நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதன்படி, 750 மில்லி லீற்றர் சிறப்பு மதுபான போத்தலின் விலை குறைந்தது 106 ரூபாவால் அதிகரிக்கும். ஏனைய வகை மதுபானங்களின் விலைகளும் 5 வீதத்தால் அதிகரிக்கும்.

இதேவேளை, வரி அதிகரிப்பைத் தொடர்ந்து, இன்று முதல் சிகரெட் விலை உயர்த்தப்படும் என்று சிலோன் டொபேக்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.



இதன்படி கேப்ஸ்டன் மற்றும் ஜோன் பிளேயர் சிகரெட்டுகளின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்.

அதேநேரத்தில், 83 மில்லி மீற்றர் கோல்ட் லீஃப் 10 ரூபாவால் அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

GSM GUNAAM SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# அடுத்துவரும் சில நாள்களுக்கு மழை நிலைமை அதிகரிக்கும்!

## எதிர்வு கூறியுள்ளது வளிமண்டலவியல் திணைக்களம்




அடுத்த சில நாள்களில் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் மழை நிலைமை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் இற்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

# போலியான ஆவணங்களைத் தயாரித்த மூவர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது!

போலியான ஆவணங்களை தயாரித்து சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனப் பதிவுப் புத்தகங்களை போலியாக தயாரித்த மூவரைப் பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

வெரஹெர பிரதேசத்தில் பாடசாலை ஒன்றை நடத்தும் ஒருவர் உட்பட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மனம்பிடிய, வெரஹெர மற்றும் நாரஹேன்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 39 மற்றும் 60 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 22 போலி சாரதி உரிம அட்டைகள், 6 கையடக்கத் தொலைபேசிகள், கணினி மற்றும் பல ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# பொரளை அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து வீழ்ந்த சிறுமி உயிரிழப்பு!

கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து வீழ்ந்து சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரளையில் உள்ள 24 மாடி அடுக்குமாடி குடியிருப்பின் 12 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்த நிலையில் சிறுமி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று இரவு ஏற்பட்ட நிலையில், சிறுமி கவலைக்கிடமான நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பொரளை, சர்பன்டைன் வீதியைச் சேர்ந்த 16 வயதுடையவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுமி மன அழுத்தம் காரணமாகச் சிறிது காலமாக சிகிச்சை பெற்று வந்தார் என்று அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

எனினும் சிறுமி அந்த மாடியில் உள்ள பெல்கனியில் இருந்து குதித்தாரா அல்லது விழுந்தாரா என்பதை கண்டறிய பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடாளுமன்றில் பெண் பணியாளருக்கு தொல்லை கொடுத்த மூவர் பணிநீக்கம்!

நாடாளுமன்றத்தின் பெண் பணியாளர்களுக்கு தவறான முறையில் தொல்லை கொடுத்த மூவரை பணி நீக்கம் செய்யுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன உத்தரவிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழு சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதன் அடிப்படையில் சபாநாயகர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டு பணிநீக்கம் செய்யப்பட்ட மூவரும் 2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் குறித்த பெண் பணியாளர்களுக்கு தொந்தரவு கொடுத்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இது குறித்த தகவல் வெளியானதை அடுத்து, மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தனவின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, நாடாளுமன்றத்தின் 15 ஊழியர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே சபாநாயகர், குற்றம் சுமத்தப்பட்ட மூவரையும் பணிநீக்கம் செய் துள்ளார்.



# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தனியான சேவைப் பிராமணக் குறிப்பு அறிமுகம்

(சர்ஜுன் லாபீர், எஸ்.அஷ்ரப்கான்)

நாடளாவிய ரீதியில் கடமையாற்றும் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிப்பதற்கு பொது நிர்வாக அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், பொது நிர்வாக உள்நாட்டு அலுவலக அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக்க பண்டாரவுக்கும் இடையில் பொது நிர்வாக அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றது.

இதனை அடுத்து பொருளாதார அபிவிருத்திஉத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிப்பது சம்மந்தமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அது விடயமாக உடனடி நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

இது விடயமாக கடந்த வாரம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன அவர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு நேரடியாக சந்தித்து பொருளாதார அபிவிருத்திஉத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிராமணக் குறிப்பு உருவாக்குவது பற்றி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடனான சந்திப்பை அடுத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிராமணக் குறிப்பு சம்மந்தமான நோக்கங்கள், அதன் முக்கியத்துவங்கள் பற்றி தொழிற்சங்க பிரதிநிதிகளால் ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இது விடயமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்து அவர்களை தெளிவுபடுத்த எதிர்வரும் வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கபீர் கலீல் தெரிவித்திருந்தார்.



# மூதூர் பாட்டாளிபுரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சைக்கிள் வழங்கல்

(எச். எம். ஹலால்தீன் )

மூதூர் பாட்டாளிபுரத்தில் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமத்தில் உள்ள அகம் வளநிலையத்தின் எம் கடமை நிலையத்தில் இலவசக் கல்வி கற்று வரும் 16 பிள்ளைகளுக்கு இவ்வாறு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இதனை கனடாவில் வசிக்கும் இளைய தம்பி ஏகாம்பரம் என்பவர் வழங்கியுள்ளார்.

அகம்அமைப்பின் பணிப்பாளர் சக்தினுடைய ஏற்பாட்டில் இது நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அகம் நிறுவனத்தின் ஸ்தாபகரும் சமூக சேவையாளரும்மான பொ.சற்சிவானந்தம், எம் கடமை அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் இ.ஜீவந்திரன், பிள்ளைகள், பெற்றோர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.





# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமூக வலுவூட்டல் வேலைத்திட்டக் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025- 2027 தொடர்பான கருத்தரங்கு மருதமுனை கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது.

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு சமூக வலுவூட்டல் அமைச்சு ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகா மையாளர் எ. ஆர். எம். சாலிஹ் தலை மையில் சிறப்பாக நடைபெற்றது.



இதன் போது கல்முனை பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம். எம். அன்சார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த கருத்தரங்கு தொடர்பிலான சிறப்புரை ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தொடர்ந்து குறித்த கருத்தரங்கில் வளவாளராக சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளராக எம்.எம்.நௌசாத் கலந்து கொண்டு பல்வேறு விளக்கங் களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக நிர்வாக கிராம சேவை உத்தி யோகத்தர், சமூர்த்தி கருத்திட்ட முகா மையாளர் எஸ்.ரஞ்சன், போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் றாசிக் நபாயிஸ், சமூர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். சனூபா, சமூர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அபிவிருத்தி உத்தியோ கத்தர் ஏ.எம். பாத்திமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாகாணசபை தேர்தல்களை நடத்தி தமிழர்களின் மனதை வெல்ல வேண்டும்!

## ஜனாதிபதியிடம் இந்துமத பீடம் கோரிக்கை

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஒரு பயங்கரமான யுத்த சூழ் நிலையை முடிவுக்கு கொண்டுவரும் முகமாகவும் சமாதான சூழலை ஏற் படுத்தும் அத்திவார முயற்சியாகவும் இலங்கை இந்திய உடன்படிக்கை மூலம் 13 ஆம் சட்டம் அமுல்பாடுத் தப்பட்டு மாகாண சபை முறைமை மாகணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் நல்லாட்சி அரசு காலத்தில் ஒரு சில காரணங்கள் காட்டி அந்த மாகாண சபை தேர்தல் குறித்த திகதியில் நடைபெறாமல் ஒத்திப் போடப்பட்டது.

இந்த நிலையில் மாகாண சபை தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற உணர்வு குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் மனதில்



எழுந்தது.

இந்த வகையில் இப்போதைய அநுர அரசு மாகாண சபை தேர்தலை நடத்து வதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டி ருக்கிறது.

இந்த மாகாண சபை ஆளுநர் அனைவரும் மத்திய அரசால் நியமிக் கப்பட்டு முழு அதிகாரம் கொண்ட வர்களாக மாகாண சபையை கொண்டு நடத்துகின்றார்கள்.

எனவே மாகாண சபை குறித்து யாரும் பிரிவினை கோஷம் என்று நினைப்பதற்கு இடம் இல்லை. இந்த வகையில் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தி வாக்களித்த மக்களின் மனதை மட்டும் அல்ல ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் மனதை வென்றெடுக்கும் செயல்பட்டில் ஈடுபடவேண்டும்.

மாகாண சபை தேர்தலை நடத்தி தேசிய நல்லுறவு மிக்க நாட்டை கட்டி எழுப்ப இந்த நடவடிக்கை நிச்சயமாக அமையும் என்று சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.






# விவசாயிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு!

(எஸ்.எம்.முபீன், அபு அலா )

திருகோணமலை – உப்புவெளி விவசாய விரிவாக்கள் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி விளக்க கருத்தரங்கு நேற்று முன்தினம் (09) மூன்றாம் கட்டை வர்த்தக சம்மேளன நிலையத்தில் இடம்பெற்றது.

விவசாயத் திணைக்கள போதனை ஆசிரியர் ஆர்.லிவிஜன் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிக் கருத்தரங்குக்கு வளவாளராக திருகோணமலை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி. பேரின்பராஜா கலந்துகொண்டு விவசாயிகளுக்கான விளக்கத்தை வழங்கி வைத்தார்.

இலைமடிச்சி நோயால் பாதிக்கப்பட்ட பயிர்களை அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது, அதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று தெளிவாக விளக்கினார்.

பாதிக்கப்பட்ட பயிர்களை என்ன முறையில் கையாளலாம் என்றும் அதற்கு சிபாரிசு செய்யப்பட்ட இராசனங்களை எந்த நேரங்களில் பாவிக்க வேண்டும் என்றும் தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த ஒரு நாள் கருத்தரங்கில் கண்ணியா, ஆண்டான்குளம், செம்பியன் ஆறு பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை தெரிவித்து அதற்கான தீர்வுகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதில் உப்புவெளி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.தர்சானந்தன், பாடவிதான உத்தியோகத்தர் ஜே.ஜே.ஜஷாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளையும் வழங்கினர்.



# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் போதைத் தடுப்பு செயற்றிட்டம்!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே . மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் வட கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான உளவள ஆலோசனை துறை இணைப்பாளர் எம்.எம்.ஜீ.வி.ரஸாத் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். போதைப்பொருள் பாவனைக்கு சமூகத்தில் அடிமையாவோரால் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன என்றும் இதனை ஒழித்து கட்டுவதில் மிகப் பெரிய பங்கு சுகாதாரத் துறையில் உள்ள குடும்ப நல உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளனர் எனவும் இதன்போது வளவாளர் தெரிவித்தார்.

வீடுகளில் உள்ள தாய்மார்கள் மற்றும் பாதிக்கப்படும் பெண்களிடம் மிகவும் நெருக்கமான உறவை கொண்டு தொடர்புகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு தரப்பு சுகாதாரத் துறையில் உள்ளவர்கள் எனவும் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில்இணைப்பாளர்களாக சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ரீ.எல். றிஸ்வானா, எஸ்.எப். றியானா, எஸ். விஜயலதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கல்விசாரா ஊழியர் பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் சந்திப்பு

(எம்.ஏ.றமீஸ்)

இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் நிர்வாகத்தினருக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான விஷேட சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி சாரா ஊழியர்களின் பதவி உயர்வு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கல்வி சாரா ஊழியர்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.கே.டபிள்யூ. விஜேசேகர, சங்கத்தின் உதவித் தலைவர் என்.எம். பௌசான் மற்றும் சங்கத்தின் உதவிச் செயலாளர் எம்.ஜே.எம். சஜீத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# கடவுச்சீட்டுகள் அலுவலகத்தை கிழக்கிலும் ஆரம்பிக்க வேண்டும்

## ஹிஸ்புல்லா எம்.பி. கோரிக்கை



(எஸ். சினீஸ் கான்)

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் ஒன்றை கிழக்கு மாகாணத்திலும் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா சபையில் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு மற்றும் வடக்கு, தெற்கு, மத்திய மாகாணங்களில் கடவுச்சீட்டு அலுவலகம் காணப்படுகின்றன. ஆனால், கிழக்கு மாகாணத்தில் அந்த அலுவலகம் கிடையாது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்று இல்லாமையால், அங்குள்ள மக்கள் இரண்டு மூன்று தினங்கள் கொழும்புக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அதிகளவு உல்லாசப் பிரயா ணிகள் வருகைத் தரும் கிழக்கு மாகா ணத்திலும் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை பெற்றுக் கொடுக்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும், உதவி வழங்கலும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் இடம்பெறும் நிகழ்வில் நேற்று ஆன்மீக அருளுரையாக. “குமரகுருதாச சுவாமிகளும் பாடல்களும் “ என்ற ஆன்மீகத் தலைப்பில் சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி, சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவித் திட்டமாக வட்டுக்கோட்டை – வட்டுதெற்கு இளம் நிலா விளையாட்டு கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக 35 ஆயிரம் ரூபா நிதி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.















### அண்ணா பல்கலை மாணவி விவகாரம்:

# சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு

அண்ணா பல்கலைக்கழகத்தில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட மாணவி விவகாரம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் டிசம்பர் 23 ஆம் திகதியன்று மாணவி ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு முழுவதும் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இந்தநிலையில், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்த நிலையில், சம்பவம் தொடர்பிலான எஃப்.ஐ.ஆர். சமூக வலைதளங்களில் வெளியாகி பாரிய சர்ச்சையை ஏற்படுத்தின.

இதையடுத்து, இந்த வழக்கை சி.பி.ஐக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள், இந்த வழக்கில் எஃப்.ஐ.ஆர். வெளியானது குறித்து மூன்று பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நியமனம் செய்த உத்தரவிட்டனர்.

அத்தோடு, அரசு அனுமதியின்றி செய்தியாளர் சந்திப்பை நடத்தி வழக்கு குறித்த முக்கிய தகவல்களை பகிர்ந்த சென்னை பொலிஸ் ஆணையர் அருண் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில், பொலிஸ் ஆணையருக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கைகள் என்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளது.

# பெண்களின் பாதுகாப்புக்கான சட்டதிருத்தம்; தமிழக சட்டப்பேரவையில் புதிய சட்டமூலம்



பெண்களின் பாதுகாப்பிற்கான சட்டதிருத்த சட்டமூலத்தினை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்வைத்துள்ளார்

ஏற்கெனவே இத்தகைய குற்றங்களுக்கு தண்டனைகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இத்தண்டனைகளை மேலும் கடுமையாக்க வேண்டிய அவசியம் உள்ளதாக மு.க ஸ்டாலின் தெரிவித்தார்.

பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருவதாக கூறினார்.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு அரசு ஒருபோதும் பின்வாங்காது என்றும் மு.க ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து உறுப்பினர்களும் இந்த சட்ட திருத்த சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று முதல்வர்ஸ்டாலின்கேட்டுக்கொண்டுள்ளார்.

10 திருத்தங்களை ஸ்டாலின் முன்வைத்துள்ளார்.

அதன்படி பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடுவோருக்கு முன்னதாக குறைந்தது 10 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது

தற்போது 14 ஆண்டுகள் வழங்கப்பட வேண்டும் என சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

நெருங்கிய உறவினர் அல்லது பொலிஸ் ஊழியர் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டால் முன்னதாக குறைந்தது 10 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது

தற்போது 20 ஆண்டுகள் வழங்கப்பட வேண்டும் என சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதேநேரம் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தினால் 20 ஆண்டுகள் கடூழிய சிறைதண்டனை அல்லது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை ஆகியன வழங்கப்பட்டன

தற்போது ஆயுள் அல்லது மரண தண்டனை விதிக்க வேண்டும் என சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

பாலியல் வன்புணர்ச்சி மற்றும் மரணத்தை விளைவிக்கும் குற்றத்திற்கு முன்னதாக குறைந்தது 20 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது

தற்போது அந்தக் குற்றத்திற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே கூட்டுப் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்ட குற்றத்திற்கு முன்னதாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது மரண தண்டனை விதிக்க வேண்டும் என சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் மீண்டும் குற்றத்தை மேற்கொள்பவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது , தற்போது அதற்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

பாலியல் தொல்லை குற்றத்திற்கு விதிக்கப்படும் 3 ஆண்டுகள் சிறை தண்டனையை 5 ஆண்டுகளாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அசிட் எனப்படும் அபாயகர திரவத்தை வீசிய குற்றத்திற்கும் வீச முயற்சித்த குற்றத்துக்கும் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

# ‘பிரிக்கப்படாத இந்தியா’ கருத்தரங்கிற்கு அயல் நாடுகளுக்கு இந்திய அரசு அழைப்பு!

இந்திய வானிலை ஆய்வு துறையின் 150 ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ‘பிரிக்கப்படாத இந்தியா’ கருத்தரங்கில் பங்கேற்க பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட அயல் நாடுகளுக்கு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, இந்தியத் துணைக்கண்டத்தின் பகிரப்பட்ட வரலாற்றை ஒற்றுமையாக இணைந்து கொண்டாட இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முதல் முயற்சி இதுவாகும்.




அதேநேரம், பாகிஸ்தான் தனது பங்கேற்பைஉறுதிப்படுத்தியுள்ளதுடன் பங்களாதேஷடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினால், அது ஒரு வரலாற்று நிகழ்வாக இருக்கும் என்பதுடன், இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளும் கொண்டாட்டங்களில் பங்கேற்க வேண்டும் என விரும்புவதாக இந்திய வானிலைத் துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவிற்காக அமெரிக்க பிரபல நிறுவனங்கள் நிதியுதவி

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு அமெரிக்காவின் Boeing மற்றும் Google நிறுவனங்கள் தலா ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளன.

எரிசக்தி நிறுவனமான Chevron, தொழில்நுட்ப நிறுவனங்களான Meta, Amazon மற்றும் Uber ஆகியவை ட்ரம்ப் நிதியத்திற்கு நன்கொடைகளை வழங்கியுள்ளன.

டொனால்ட் ட்ரம்பின் பதவியேற்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பதவியேற்பு விழாவை YouTube இல் நேரலையாக ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ட்ரம்பின் பதவியேற்பு நிகழ்விற்காக கார் நிறுவனங்களான Ford, General Motors மற்றும் Toyota ஆகியனவும் தலா 1 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளன.





# லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீ; 11 பேர் பலி, 50 பேர் காயம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் கடற்கரை பகுதியில் உள்ள வனப்பகுதியில் காட்டுத்தீ பரவத்தொடங்கியது. பலத்த காற்று காரணமாக காட்டுத்தீ நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகிறது.

காட்டுத்தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு, மீட்புக் குழுவினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனிடையே, காட்டுத்தீ குடியிருப்பு பகுதிகளுக்கும் பரவி வருகிறது. வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் தீக்கிரையாகி வருகின்றன. காட்டுத்தீ காரணமாக சுமார் 1 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். காட்டுத்தீயால் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு முற்றிலும் நாசமாகியுள்ளது.

இந்நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வேகமாக பரவி வரும் காட்டுத்தீயில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.



மேலும், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த காட்டுத்தீயால் குறைந்தது 10,000 இற்கும் அதிகமான வீடுகள், கட்டடங்கள் மற்றும் பிற கட்டமைப்புகள் எரிந்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 11/01/2025

## தென் ஒன்றாரியோவில் பனிப்பொழிவு எச்சரிக்கை

தென் ஒன்றாரியோவில் பனிப்பொழிவு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் சுமார் 25 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும்

02





# அமெரிக்க காட்டுத் தீயை அணைக்க கனடா தீயணைப்பு படையினர் உதவி

**அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்க கனடா தீயணைப்பு படையினரும் உதவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பரவிய காட்டுத் தீ காரணமாக 300,000 பேர் வரை அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். 10,000 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.**

பசிபிக் பாலிசேட்ஸ் பகுதியில் 19,000 ஏக்கர் நிலத்தையும், அல்டேனா பகுதியில் 13,000 ஏக்கர் நிலத்தையும் காட்டுத் தீ எரித்துள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை கனேடிய அரசாங்கத்திற்கு சொந்தமான விமானம், அணைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பது தொடர்பான செய்தியை கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார். இந்நிலையில், அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், கனடாவிற்கு அச்சுறுத்தல் விடுத்திருந்த நிலையில், கனேடியர்கள் அமெரிக்கர்களை காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர் என சமூக வலைத்தளங்களில் பலரும் தெரிவித்து வருகின்றனர்.

# மாகாண முதல்வர்களை சந்திக்கின்றார் ட்ரூடோ

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கும் மாகாண முதல்வர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று நடைபெற உள்ளது.

அமெரிக்காவினால் விடுக்கப்பட்டுள்ள பொருளாதார அச்சுறுத்தல்கள் தொடர்பில் இந்த சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

எதிர்வரும் வாரம் இந்த சந்திப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 15 ஆம் திகதி பிரதமருக்கும் மாகாண முதல்வர்களுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற உள்ளது.

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஏற்கனவே லிபரல் கட்சியின் தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில், இந்த சந்திப்பு நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றார்.



குறிப்பாக கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலையில் கனடிய பிரதமர் முதல்வர்களை சந்தித்து எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்கள் பற்றி கலந்துரையாட உள்ளார் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.



# துடைப்பத்தை பயன்படுத்தி தடுக்கப்பட்ட கொள்ளை சம்பவம்

கனடாவில் நகைக்கடை ஒன்றில் துடைப்பத்தை பயன்படுத்தி கொள்ளையை தடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவம் கனடாவின் மார்க்கம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முகமூடி அணிந்து கொண்ட மூவர் கடைக்குள் பிரவேசித்து காட்சியறையில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த நகைகளை கொள்ளையிடும் நோக்கில் சுத்தியல்களைக் கொண்டு காட்சிக்கூடங்களை தாக்கியுள்ளனர்.

இதன்போது, விரைந்து செயல்பட்ட கடையின் உரிமையாளர் துடைப்பத்தால் தாக்கி கொள்ளையர்களை விரட்டி அடித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த கொள்ளை முயற்சி சி.சி.டி.வி. காணொளியில் பதிவாகியுள்ளதுடன், எந்த ஒரு பொருளும் களவாடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஜெர்ரி சொரானி என்ற கடையின் உரிமையாளர் இந்த நகைக் கடையை சுமார் 16 ஆண்டுகளாக நடத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.







## தென் ஒன்றாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறிப்பாக பெய்ரே, இன்னிஸ்பில் பகுதிகளில் பலத்த பனிப்புயல் வீசக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

பெய்ரே, கோட்ரிச், இன்னிஸ்புல், ஓவன்சவுன்ட், ப்ளூ மவுன்டன், ஸ்டார்ட்போர்ட் உள்ளிட்ட சில இடங்களில் பனிமூட்டம் மற்றும் பனிப்பொழிவு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியர்களுக்கு பிணை வழங்கவில்லை

## கனடா தெரிவிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியாவில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நான்கு இந்தியர்களுக்கு பிணை வழங்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகளை கனேடிய அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கட்டாய தடுப்பு உத்தரவுகளின் கீழ் காவலில் உள்ளனர் என அவர்கள் தெளிவுபடுத்தினர்.

மேற்படி நபர்களை கட்டாய காவலில் வைக்க உத்தரவிட்ட பிரிட்டிஷ் கொலம்பியா நீதிமன்றம், அடுத்த விசாரணையை பெப்ரவரி 11 இல் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக கனேடிய சட்டமா அதிபர் அமைச்சின் மூத்த அதிகாரியான ஆன் சீமோர் கூறியுள்ளார்.

நீதிமன்றம் பிறப்பித்த தடுப்புக்காவல் உத்தரவு, விசாரணை மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் காவலில் இருப்பதை உறுதி செய்கிறது.

கரன் பிரார், அமந்தீப் சிங், கமல்ப்ரீத் சிங் மற்றும் கரன்ப்ரீத் சிங் ஆகிய நான்கு இந்தியர்களும் குறித்த வழக்கில் முதல் நிலை கொலை மற்றும் கொலைக்கு சதி செய்தனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

ஹர்தீப் நிஜ்ஜார், ஒரு முக்கிய காலிஸ்தான் சார்பு தலைவர், 2023 ஜூன் மாதம் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரேயில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதை அடுத்து இந்த வழக்கு உலக அளவில் கவனம் பெற்றது.

இந்த குற்றச்சாட்டுகளை இந்தியா மறுத்துள்ளது, அவை 'ஆதாரமற்றவை' என்றும் கூறியுள்ளது.



# டொரன்டோவில் ஒருவரிடம் ஒரு லட்சம் டொலர்கள் மோசடி

டொரன்டோவை சேர்ந்த நபர் ஒருவர் இணைய மோசடியில் சிக்கி சுமார் ஒரு லட்சம் டொலர்கள் வரையில் இருந்துள்ளார்.

முதலீட்டு திட்டம் ஒன்று தொடர்பில் விளம்பரம் செய்து மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டொரன்டோவை சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத நபர் ஒருவர் சுமார் ஒரு லட்சம் டொலர்களை இவ்வாறு முதலீடு செய்து இழந்துள்ளார்.

கிரிப்டோ முதலீட்டு திட்டம் ஒன்றில் இவ்வாறு பண மோசடி செய்யப்பட்டதாக அந்த நபர் தெரிவிக் கின்றார்.

எனவே முதலீட்டு திட்டங்களில் முதலீடு செய்யும் போது இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மிகுந்த அவதானத்துடன் பணத்தை முதலீடு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மோசடிகாரர்கள் பல்வேறு வழிகளில் பணத்தை அபகரிக்க முயற்சிக்கலாம் எனவும் பிரபல நிறுவனங்களில் பெயர்களிலும் இவ்வாறான மோசடிகள் இடம் பெற கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.